**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of
Communal Clash Cases in Southern Districts
Madurai.

Calender : எஸ்.சி.5/2010

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for Prosecution அ.த.சா.42

Defence

Court

Name : அன்புபிரகாஷ், ஆய்வாளர்,

Father's/Husband Name :

Village : தென்காசி

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 21.03.2019.

**முதல் விசாரணை**

நான் தற்போது கன்னியாகுமரி மாவட்டம், கோட்டார் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருக்கின்றேன். கடந்த 24.01.2008 ஆம் நாள் திருநெல்வேலி மாவட்டம் தென்காசி காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வந்த போது அன்று 23.50 மணிக்கு நிலைய அலுவலில் இருந்த போது தென்காசி அரசு மருத்துவமனையில் இருந்து தொலைபேசி மூலம் கிடைக்கப்பட்ட தகலினைப் பெற்று 25.01.2008 ஆம் நாள் 00.15 மணியளவில்

தென்காசி அரசு மருத்துவமனைக்குச் சென்றேன். அங்கு உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்த தேனி மாவட்டம், சின்னமனூரைச் சேர்ந்த தனுஷ்கோடியாபிள்ளை மகன் சேதுபிள்ளை என்பவரை விசாரித்து அவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை நான் பதிவு செய்தேன். அதில் அவருடைய கையொப்பம் பெற்றேன். பின்னீட்டு அதிகாலை ஒரு மணியளவில் நிலையம் வந்து புகாரின் தன்மைக்கேற்ப தென்காசி காவல்நிலைய குற்ற எண்.108/2008 பிரிவுகள் 324 இ.த.ச. உடன் இணைந்த 3 மற்றும் 5, I.E.S. ஆக்ட்படி வழக்குப் பதிவு செய்து முதல்தகவலறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவலறிக்கை அ.சா.ஆ.50 ஆகும். முதல் தகவலறிக்கை அசலையும், வாதி கொடுத்த புகார்மனுவையும் இணைத்து தென்காசி நீதித்துறை நடுவர் அவர்களுக்கும் மற்ற நகலை தென்காசி ஆய்வாளர் அவர்களுக்கும், உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். இதுசம்பந்தமாக என்னை ஆய்வாளர் அவர்கள் விசாரித்தார். நான் போய் பார்த்த சமயத்தில் காயம்பட்ட நபர் அடிவயிற்றில் காயம்பட்டும், வலது பக்கம் விலாவில் காயம்பட்டு, வலதுகால்தொடை இடுப்பு ஆகிய இடங்களில் காயம்பட்டும் சிகிச்சை பெற்று வந்தர். இது தவிர அங்கு நின்று கொண்டிருந்த லோடு ஆட்டோ சேதம் அடைந்ததாக சொன்னார். சம்பவம் இரவு 8.30 மணியளவில் நடந்ததாகச் சொன்னார். எனக்குத் தகவல் கிடைத்தவுடன் நான் மருத்துவமனைக்குச் சென்று வாக்குமூலம் பதிவு செய்து பின்னீட்டு காவல் நிலையத்திற்கு வந்து வழக்குப்பதிவு செய்ததால் காலதாமதம். இந்த வழக்கின் புலன்விசாரணை அதிகாரி தென்காசி காவல்நிலைய ஆய்வாளர். இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட காவல் ஆய்வாளர் அந்த சமயத்தில் அங்கு சட்டம் ஒழுங்கினை பார்த்துக் கொண்டிருந்தார். எனவே தான் குற்ற எண்.107 குற்ற எண் வழக்கினை குற்றாலம் ஆய்வாளரக்கு புலன்விசாரணைக்கு அனுப்பினார்கள். இதுசம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகளுக்கான குறுக்கு விசாரணை

சம்பவம் நடந்து 3 மணி நேரம் கழித்துத்தான் தகவல் எங்களுக்கு வந்தது. இந்த சம்பவம் சம்பந்தமாக 3 மணிநேரமாக வேறு யாரிடம் இருந்தும் எங்களுக்குத் தகவல் வரவில்லை. காவல்நிலையத்தில் இருந்து மருத்துவமனை அரை கிலோமீட்டர். சம்பவ இடத்தில் இருந்து மருத்துவமனை 200 மீட்டர்

தூரத்தில் உள்ளது. புகாரினை புகார்தாரர் சொல்லச் சொல்ல நான் எழுதினேன். தமிழில் எழுதப்பட்டதும், ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளதும் ஒரே நபரால் எழுதப்பட்டுள்ளது போல் தெரியவில்லை என்றால் சரியல்ல. எழுத்துக்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் இருப்பதால் வித்தியாசமாக தெரிகிறது. நான் பதிவு செய்த வாக்குமூலத்தில்புகார்தாரரின் கையொப்பத்தின் கீழ் தேதி, நேரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் சேதுபிள்ளை எனச் சொல்லிவிட்டு சேது என கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். ஆட்டோடயர் வெடித்ததாக சத்தத்தைக் கேட்டுநினைத்தேன் என புகாரில் சொல்லியுள்ளார். அதுகுறித்து முழுமையான விபரங்களை தெரிந்து கொள்ளாமலேயே நான் வெடிமருந்து சட்டத்தின் கீழ் வழக்குபதிவு செய்தேன் என்பது சரியல்ல. மருத்துவமனையிலிருந்து காவல்நிலையத்திற்கு 10 நிமிடத்தில் வரலாம். 1 ஒரு மணிக்கு முதல்தகவலறிக்கை பதிவு செய்தேன். நான் சொன்ன நேரத்தில், சொன்னவிதத்தில் புகார் வாக்குமூலம் என்னால் பதிவு செய்யப்படவில்லை எனச் சொல்லுவது சரியல்ல. நான் சொன்னது போல் முதல் தகவலறிக்கை என்னால் பதிவு செய்யப்படவில்லை என்பதும் சரியல்ல. காவல்நிலையத்திலிருந்து நீதிமன்றத்திற்கு 25.01.2008 ஆம் தேதியில் முதல் தகவலறிக்கை பகலில் அனுப்பட்டது.

மறுவிசாரணை - இல்லை.